23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

**Eastern University, Sri Lanka**

**Faculty of Commerce and Management**

**External Degree**

**Part III Examination in Bachelor of Economics -2009/2010 (May / June 2013)**

**(Proper)**

**EXE 4012 Research Methods in Economics**

**சகல வினாக்களுக்கும் விடை தருக.** **நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

1. (a) ஆய்வு என்பதன் கருத்தினை பல அறிஞர்களின் வரைவிலக்கணங்களைச் சுட்டிக்காட்டி விளக்குக.

(b) முறைமையானதாக (systematic) இருத்தல் சிறந்த ஆய்வின் ஒன்றின் பண்புகளில் ஒன்றாகும். விளக்குக.

(c) கணிய சார் ஆய்வு (Quantitative Research) ஒன்றின் குணாதிசயங்கள் யாவை?

(d) பின்வரும் ஆய்வுத் தலைப்புகள் எவ்வகை ஆய்வைச் சார்ந்தது என அடையாளம் காண்க:

(i) கிராமிய வறுமையை ஒழிப்பதில் நுண்நிதியிடல் (Micro Financing) திட்டத்தின் செயற்றிறன்.

(ii) ஊழியர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான ஊழியர் பயிற்சியின் வினைத்திறன்.

(iii) தொழிநுட்ப வளர்ச்சிக்கும் வேலையின்மை மட்டத்திற்குமிடையிலான தொடர்பு.

(iv) வங்கி முகாமையாளர்களின் தலைமைத்துவ பாணிகள்

(v) நிறுவனங்களின் விற்பனையை அதிகரிப்பதில் விளம்பரங்களின் பங்களிப்பு.

**(20 புள்ளிகள்)**

2. (a) “ஆய்வுப் பிரச்சினை” என்பதனால் நீங்கள் விளங்கிக்கொள்வதென்ன?

(b) ஆய்வுப் பிரச்சினை ஒன்றைத் தெரிவு செய்யும் போது நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களில் இரண்டினை விளக்குக.

(c) ஆய்வு ஒன்றில் “எண்ணக்கருவாக்க சட்டவாக்கம்” (Conceptual Framework) எவ்வாறு அமைக்கப்படும் என்பதை உதாரணத்துடன் விளக்குக.

(d) கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் நிதிசார் ஊக்குவிப்புத் திட்டங்களும் நிதிசாரா ஊக்குவிப்புத் திட்டங்களும் பல்வேறு வகையில் இணைந்தவாறு எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன என்பதனை ஆய்வு செய்ய நீங்கள் விரும்புவதாகக் கருதுக. இதனைப் பரீட்சிப்பதற்கு பொருத்தமான கருதுகோள்களை நிறுவுக.

**(20 புள்ளிகள்)**

3. (a) “ஆய்வு வடிவமைப்பு” (Research Design) என்னும் பதம் குறிப்பதை விளக்குக.

(b) கரையோர மீனவர்களின் தொழிற் தரத்தினை உயர்த்துவதற்காக அமுல்படுத்தப்படும் தொழில் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று அம் மீனவர்களின் தொழிற் தரத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை ஆய்வு செய்ய பொருத்தமான ஆய்வு வடிவமைப்பு (Study Design) ஒன்றினை சிபாரிசு செய்து அதனை வரைபட உதவியுடன் விளக்குக.

(c) குறுக்குமுக ஆய்வு வடிவமைப்பின் (Cross Sectional Study Design) அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் ஆராய்க.

(d) பரீட்சித்தல் அல்லாத ஆய்வு வடிமைப்பு (Non-Experimental Study Design) எவ்வாறு அமைக்கப்படுகின்றது என்பதை விளக்குக.

**(20 புள்ளிகள்)**

23 AUG 2013 ... LANKA

4. (a) பொருளியல் துறையில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கு அவதானம் மூலமான தரவு திரட்டல் முறை பொருத்தமானதாக அமையும் சந்தர்ப்பங்களை ஆராய்க.

(b) கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலம் தரவு திரட்டும் முறையின் அநுகூலங்களையும் பிரதிகூலங்களையும் ஆராய்க.

(c) தரவு சேகரிப்பு கருவி தொடர்பாக, நம்பகத்தன்மை (Reliability) மற்றும் உறுதித்தன்மை (Validity) என்னும் பதங்களை விளக்குக.

(d) லிக்கட் அளவு கோல் (Likert Scale) மூலம் வினாக் கொத்து தயாரிக்கும் படிமுறைகளை விபரிக்குக.

**(20 புள்ளிகள்)**

5. (a) விகிதாசார ரீதியாக குழுவாக்கப்பட்ட எழுமாற்று மாதிரியமைத்தல் (Proportionate Stratified Random Sampling) முறை பொருத்தமானதாக அமையும் சந்தர்ப்பங்களை ஆராய்க.

(b) எழுமாற்றல்லா மாதிரியமைத்தல் (Non-Random Sampling) முறையின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

(c) ஆய்வுகளில் தரவு பகுப்பாய்வினை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் இணைவுசார் புள்ளிவிபர (Relational Statistics) முறைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(d) ஆய்வு முன்மொழிவு ஒன்றின் முக்கியத்துவத்தினை விளக்குக.

**(20 புள்ளிகள்)**